(குறுக்கீடுகள்) சரி, போங்கள். (குறுக்கீடுகள்) திரு. அபூபக்கர் நீங்களும் வெளிநடப்பா? (குறுக்கீடுகள்) வெளிநடப்பு என்றால் சொல்லவே வேண்டாம். (குறுக்கீடு)

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் கேட்டார்கள். பதில் சொல்லலாம். ** நான் வெளிநடப்பு செய்கிறேன்.*

(இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அபூபக்கர் அவர்கள் பேசிய வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. தமிமுன் அன்சாரி உங்கள் கருத்தை நான் பதிவு செய்துகொள்கிறேன். உட்காருங்கள்.*

(ஆ) சென்னை கொடுங்கையூர், கவியரசு கண்ணதாசன் நகரில் உள்ள பேக்கரியில் ஏற்பட்ட தீ விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15–7–2017 அன்று இரவு 11–30 மணியளவில் கொடுங்கையூர், கவியரசு கண்ணதாசன் நகரில் உள்ள ஒரு பேக்கரியில் தீ விபத்து ஏற்பட்டது. தீயை அணைக்க முயன்ற தீயணைப்பு அதிகாரி திரு. ஏகராஜ் அவர்கள் இறந்து போயிருக்கிறார்கள். அதுபோல், காவலர்கள் மற்றும் பொதுமக்கள் என 48 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற தீயணைப்பு வீரர்கள் மற்றும் காவலர்களுக்குப் போதிய வசதி மற்றும் மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால் அவர்கள் தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அங்கே பொதுமக்கள் மருத்துவ வசதியின்மையால் மிகவும் அவதிப்படுகிறார்கள். இந்தத் தீ விபத்திற்கான காரணம் என்னவென்றால், சுமார் 4X8 அகலம் உள்ள ஒரு கடையில் கேஸ் சிலிண்டர்கள் மற்றும் அடுப்புகளை வைத்து, மாநகராட்சி நிருவாகத்திடம் அனுமதி*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பெற்றது.*

பெறாமல் வியாபாரம் செய்த அந்த பேக்கரியினால் இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது. எனவே, இதுகுறித்து மாநகராட்சி என்ன நடவடிக்கை எடுத்தது? அதேபோன்று, மருத்துவமனையில் பாதிக்கப்பட்டிருக்கின்றவர்களை தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சிறப்புக் கவனம் செலுத்த இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15–7–2017 அன்று இரவு 11–17 மணியளவில், கண்ணதாசன் நகர், கொடுங்கையூரில், மூடியுள்ள பேக்கரியில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக தீ கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கிடைக்கப்பெற்றவுடன், கொருக்குப்பேட்டை நீர்தாங்கி வண்டி, உடனடியாக தீயணைப்பு வீரர்கள் தங்களுடைய தற்காப்பு உடைகளுடன் சம்பவ இடத்திற்குச் சென்றனர். மேலும், எஸ்பிளனேடு நிலைய தண்ணீர் லாரியும், தீயணைப்பு வீரர்களும் தற்காப்பு உடைகளுடன் அனுப்பி வைக்கப்பட்டனர். சம்பவ இடத்தை அடைந்தவுடன், கொருக்குப்பேட்டை நிலைய நீர்த்தாங்கி வண்டிமூலம் விபத்து நிகழ்ந்த கட்டடத்தைக் குளிர்ப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பேக்கரியிலிருந்து புகை வெளிவருவதைப் பார்த்த தீயணைப்போர், திரு. ஏகராஜ், திரு. லட்சுமணன் மற்றும் திரு. ராஜதுரை, இயந்திர கம்மியர் ஓட்டி திரு. ஜெயபாலன் ஆகியோர் கடையின் ஷட்டரை இழுக்க முயற்சி செய்தனர். கடையின் ஷட்டர் அரையடி மேல்நோக்கி இழுக்கப்பட்டவுடன் அந்தக் கடையில் இருந்த எரிவாயு சிலிண்டர் வெடித்து, கடையின் ஷட்டர் துண்டு, துண்டாக உடைந்து அதிவேகத்துடன் தூக்கி எறியப்பட்டு, மிகப் பெரிய ஒரு தீப்பிழம்பு உருவாகி, தீயணைப்பு வீரர்கள், பணியில் இருந்த காவலர்கள் மற்றும் பொதுமக்களைத் தாக்கியது. கடையின் ஷட்டர் கிழிந்து 30 அடி வரை வீசியடித்ததால் அதன் தாக்கம் முழுவதும் தீயணைப்பு வீரர்களை அதிக அளவில் பாதித்தது.*

பாதிக்கப்பட்ட அனைவரும் உடனடியாக ஸ்டான்லி அரசு மருத்துவமனை மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு '108' நோயாளர் ஊர்திகள் மற்றும் தனியார்

ஊர்திகள்மூலம் கொண்டு செல்லப்பட்டனர். தீயணைப்போர் திரு. ஏகராஜ் தலையில் பலத்த காயம் மற்றும் உடலில் ஏற்பட்ட தீக்காயங்களால் உயிரிழந்தார். உயிரிழந்த திரு. ஏகராஜுக்கு பாண்டிச்செல்வி என்ற மனைவியும், இரண்டு மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். அவரது வாரிசுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து 3 இலட்சம் ரூபாயும், கருணைத் தொகை 10 இலட்சம் ரூபாயும் என மொத்தம் 13 இலட்சம் ரூபாய் அவரது குடும்பத்திற்கு இழப்பீடு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

பலத்த காயமடைந்திருந்த தீயணைப்போர் திரு. ராஜதுரை மற்றும் திரு. லட்சுமணன் ஆகியோர் அவர்களுடைய உறவினர்களின் வேண்டுகோளின்படி, தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, தொடர் சிகிச்சை பெற்று வருகின்றனர். காவல் துறை மானியக் கோரிக்கையின்போது நான் அறிவித்த "எதிர்பாரா மருத்துவ நல நிதி" மூலம் இவர்களுக்கான மருத்துவச் செலவு மேற்கொள்ளப்படும். இதற்காக 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தற்போது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை பணியாளர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை, காவல் துறைக்கு இணையாக, பணியின்போது வீரமரணம் அடைவோருக்கு 5 இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாயாகவும், நிரந்த ஊனம் அடைவோருக்கு 1 இலட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சம் ரூபாயாகவும், கொடும் தீக்காயம் அடைவோருக்கு 20,000 ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாகவும், 20 விழுக்காட்டிற்கும் குறைவாக தீக்காயம் அடைவோருக்கு 20,000 ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாகவும் இந்த நிதியாண்டிலிருந்து உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

வெளிக்காயங்களுடன், இயந்திர கம்மியர் ஓட்டி திரு. ஜெயபாலன், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, 17–7–2017 அன்று வீடு திரும்பியுள்ளார். கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் நிலைய மருத்துவ அலுவலருக்கு (RMO) 16–7–2017 நள்ளிரவு 12–10 மணிக்கு '108' அவசரகால ஆம்புலன்ஸ் ஊர்தி மேலாளர் அவர்களிடமிருந்து, கொடுங்கையூரில் தீ விபத்து

ஏற்பட்டுள்ளதாகவும், இதன் அடிப்படையில் நிலைய மருத்துவ அலுவலர் உடனடியாக கல்லூரி முதல்வருக்கும், அவசர சிகிச்சைப் பிரிவு மருத்துவர்களுக்கும், தீக்காயப் பிரிவு தலைமை மருத்துவருக்கும் ஆயத்தமாக இருக்க தகவல் அனுப்பினார். மருத்துவமனையின் மற்ற பிரிவுகளில் பணியில் இருந்த 5 மருத்துவர்கள் அவசரப் பிரிவிற்கு அனுப்பப்பட்டனர். அதேபோன்று, தீக்காயப் பிரிவிலும், 3 அறுவை சிகிச்சை முதுநிலை பயிற்சி மருத்துவர்களும், ஓர் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பேராசிரியரும், 8 கூடுதல் செவிலியர்களும், 30 பயிற்சி செவிலியர்களும் உடனடியாக அவசரப் பணிக்கு அழைக்கப்பட்டு, அவர்கள் அனைவரும் மருத்துவமனைக்கு வந்துவிட்டனர். அதனைத் தொடர்ந்து, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு 30 நபர்கள் கொடுங்கையூரில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டு, தீக்காயங்களுடன் தீக்காயப் பிரிவில் சேர்க்கப்பட்டனர். அன்றே, மேலும் 4 நபர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதே சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 11 நபர்கள் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டும் மற்றும் 2 நபர்கள் வெளி நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று வருகின்றனர். அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட ஒருவரையும் சேர்த்து, மொத்தம் 48 பேருக்கு இச்சம்பவத்தில் தீக்காயம் ஏற்பட்டது. இவர்களில் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் 5 நபர்கள், தீயணைப்புப் படை வீரர்கள் 4 நபர்கள், ஊர்க்காவல் படை வீரர் ஒருவர் மற்றும் பொதுமக்கள் 38 பேர் ஆவர்.

இவர்களில், தீயணைப்பு வீரர் திரு. ஏகராஜ் என்பவர் 23 விழுக்காடு தீக்காயம் மற்றும் தலைக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டு, டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும், சிகிச்சை பலனின்றி, 16–7–2017 அன்று அதிகாலை 3–15 மணிக்கு இறந்துள்ளார்.

நண்பகல் 12–00

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் முகம் மற்றும் மூச்சுக் குழாய்களில் வெப்பம் மற்றும் புகையினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 32 நபர்களில், 12 நபர்கள் மருத்துவர் அனுமதியின்றி, உறவினர்களின் வேண்டுகோளின்படி, தனியார் மருத்துவமனைக்குச் சென்றுள்ளார்கள். மீதமுள்ள 20 நபர்கள் கீழ்ப்பாக்கம்

2017 ஜூலை 18] **[திரு. எடப்பாடி கே. பழனிசாமி]**

மருத்துவமனையிலும், 10 நபர்கள் ஸ்டான்லி மருத்துவமனையிலும் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றார்கள். நேற்று 17–7–2017 அன்று திரு. ஜெயபாலன், தீயணைப்புத் துறை வீரர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளார். மீதமுள்ள 39 நபர்களில், 5 நபர்களுக்கு 60 முதல் 82 விழுக்காடு வரை தீக்காயங்கள் உள்ளன. 16 நபர்களுக்கு 40 முதல் 60 விழுக்காடு வரை தீக்காயங்கள் உள்ளன, 12 நபர்களுக்கு 20 முதல் 40 விழுக்காடு வரை தீக்காயங்கள் உள்ளன. மீதமுள்ள 6 நபர்களுக்கு 20 விழுக்காட்டிற்குக் குறைவாக தீக்காயங்கள் உள்ளன.

காவல் துறையைச் சேர்ந்தவர்களில் இருவர் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்றனர். 3 காவல் துறையைச் சேர்ந்தவர்களும், ஊர்க் காவல் படை வீரர் ஒருவரும் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். ஐந்து பொதுமக்களும், உறவினர்களின் வேண்டுகோளின்படி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிறு தீக்காயங்களுடன் இரண்டு பொதுமக்கள் மருத்துவர் அனுமதியின்றி வீடு திரும்பியுள்ளனர். சிகிச்சை பெற்று வரும் அனைத்து உள் நோயாளிகளுக்கும் உயர்தர மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், பேராசிரியர்கள், ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை உதவி பேராசிரியர் மற்றும் உள்ளிருப்பு மருத்துவர்கள் பாதிக்கப்பட்ட அனைவரையும் 24 மணி நேரமும் கண்காணித்து வருகின்றனர். மேலும், 16–7–2017 அன்று காலை 7 மணி முதல் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை உதவி பேராசிரியர், பொது மருத்துவர், அறுவை சிகிச்சை மருத்துவர், கண் மருத்துவர், எலும்பு சிகிச்சை நிபுணர், மயக்கவியல் நிபுணர், நரம்பு சிகிச்சை நிபுணர், சிறுநீரக சிகிச்சை நிபுணர், குழந்தைகள் நல சிகிச்சை நிபுணர், மனநல சிகிச்சை நிபுணர் மற்றும் 35 செவிலியர்கள் உள்ளடங்கிய ஒரு சிறப்பு மருத்துவக் குழு ஏற்படுத்தப்பட்டு, இக்குழு தொடர்ந்து பணியாற்றி வருகின்றது.

16–7–2017 அன்று இரவு மாண்புமிகு சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், தீக்காய சிகிச்சை பெற்று வரும் நபர்களைப் பார்வையிட வந்தபோது, அப்பிரிவில் பணியிலிருந்த மருத்துவர்கள் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு விளக்கம் அளித்துள்ளார்கள்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][*2017 ஜூலை 18*

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட தீக்காயப் பிரிவு, பிளாஸ்டிக் சர்ஜரி துறையின்கீழ் ஜூன் 1981–ல் மாண்புமிகு புரட்சித் தலைவரால் துவக்கப்பட்டது. இப்பிரிவு, 50 படுக்கைகள் கொண்ட பிரிவாக விரிவுபடுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் மார்ச் 1985 ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்டது.

சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள தீக்காயப் பிரிவு ஒப்புயர்வு மையமாக வலுப்படுத்தப்படும் என்று 2012–2013 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு, அதனடிப்படையில் முதற்கட்டமாக 4.87 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு வழங்கி, 31–10–2012–ல் மாண்புமிகு அம்மாவின் அரசால் ஆணையிடப்பட்டது.

1981 ஆம் ஆண்டு 149 நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்த இந்தத் தீக்காயப் பிரிவு 2016 ஆம் ஆண்டில் 3,746 நபர்களுக்கு சிகிச்சை அளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு இதுவரை, 1,476 நபர்கள் இந்தப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர். தென்னிந்தியாவில் உள்ள மிகப் பெரிய 70 படுக்கைகளைக் கொண்ட ஒப்புயர்வு மையமாக இது செயல்பட்டு வருகிறது. அனைத்து தென்னிந்திய மாநிலங்களுக்கும் உயர்நிலை நோயாளிகளைப் பரிந்துரைக்கும் ஒரு மையமாக செயல்பட்டு, சர்வதேச அளவில் பாராட்டுதல்களையும் இந்த மையம் பெற்றுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டில் தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளிலிருந்து 587 நோயாளிகள் இந்த ஒப்புயர்வு மையத்திற்கு உயர்நிலை சிசிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுள்ளனர். 2017 ஆம் ஆண்டில் இதுவரை பரிந்துரைக்கப்பட்ட 304 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு 24 மணி நேரமும் இயங்குகின்ற பிரிவு ஆகும். இந்த ஒப்புயர்வு மையத்தைப் பொறுத்தவரை, தீக்காயம் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு முழுமையான உலகத் தரம் வாய்ந்த உயர்தர சிகிச்சை அளிக்கும் வகையில், தேவையான அனைத்து மருந்துகள், கருவிகள், பயிற்சி பெற்ற மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்கள் இருக்கும் நிலையில், பாதிக்கப்பட்டோருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை என்ற செய்தி உண்மை நிலைக்குப் புறம்பானது.

2017 ஜூலை 18] **[திரு. எடப்பாடி கே. பழனிசாமி]**

தீக்காயத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(இ) மத்திய அரசின் ஏழாவது ஊதியக் குழு அளித்துள்ள பரிந்துரைகளை தமிழக அரசு ஊழியர்களுக்குச் செயல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் எழுந்து நின்று கேட்டால் எப்படி? உட்காருங்கள். (குறுக்கீடு) நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இப்படியெல்லாம் கேட்கக்கூடாது. திரு. செழியன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

பிற்பகல் 12–05

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பது இங்கு இருக்கிற ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் நாம் அனைவரும் அறிவோம். அவர்கள் இன்று ஒரு பெரிய குழப்பமான நிலையில், ஜாக்டோ–ஜியோ ஆகிய இரண்டு தரப்பைச் சார்ந்த அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் இணைந்து போராட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். மத்திய அரசாங்கத்திற்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று, நானே அரசு ஊழியராக இருந்தபோது ஜாக்டோ–விலே போராடினேன். அப்போது கலைஞர் அவர்கள் மத்திய அரசு ஊழியருக்கிணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்கினார். இப்போதும் அதேபோல, ஏழாவது ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ளது. அவர்கள் வைத்திருக்கிற ஒரு கோரிக்கை, மிக முக்கியமான கோரிக்கை.*